**செய்தி வெளியீடு எண்: 02/12/2020** **நாள்: 02.12.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

அமெரிக்காவிலுள்ள பாதுகாப்பிற்கான சர்வதேச தொழில்முறை பாதுகாப்பு சங்கமான உலக பாதுகாப்பு அமைப்பு பின்வரும் குறிக்கோள்களின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது:

- உலக பாதுகாப்பு அமைப்பு (WSO) உறுப்பினர்களிடையே தகவல் மற்றும் அனுபவங்களின் பயனுள்ள பரிமாற்றத்தை ஊக்குவித்தல்;
- பரஸ்பர அக்கறை உள்ள பகுதிகளில் பிற சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்;
- பாதுகாப்பு மற்றும் விபத்து தடுப்பு தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவித்தல்;
- தொழில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் விபத்து தடுப்பு ஆகியவற்றின் பல பிரிவுகளில் அதன் உறுப்பினர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பயிற்சியாளர்களிடையே உலகளாவிய தொழில்முறை மற்றும் திறன் மேம்படுத்துதல்;

இவ்வுலக பாதுகாப்பு அமைப்பு (WSO), பாதுகாப்பு தரநிலைகளை மிகச் சரியாக கடைபிடித்து பாதுகாப்பை உறுதி செய்யும் நிறுவனத்திற்கு WSO அக்கறை நிறுவனம் என்ற சர்வதேச விருதினை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இந்த விருதிற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆறு நிறுவனங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. 2020-ஆம் ஆண்டிற்கான இந்த மதிப்புமிக்க விருதினை இந்தியாவிலிருந்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பெற்றுள்ளது.

முன்மாதிரியான பாதுகாப்பு தரங்களை உறுதி செய்தல், பாதுகாப்பு பதிவுகளை திறம்பட பராமரித்தல், மக்கள், உடைமை, வளங்கள், சுற்றுச்சூழல் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து தள பொறியாளர்கள் / ஊழியர்களுக்கு, பாதுகாப்பு / சுற்றுச்சூழல் சார்ந்த நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடத்துதல் மற்றும் அதன் ஊழியர்கள் மற்றும் சமூகத்தின் நல்வாழ்வுக்காக தனித்துவமான அக்கரை காட்டுதல் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட விருது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**